CPS

# வழக்குத்தொடுப்பு

## வழக்குத் தொடுக்கும் தீர்மானம்

இத்துண்டுப் பிரசுரம் வழக்குத்தொடுப்புத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது எவ்வாறு என விளக்குகின்றது

Prosecutions - The decision to prosecute
Tamil edition, 2010

2010

# வழக்குத்தொடுப்பு

## வழக்குத் தொடுக்கும் தீர்மானம்

இத்துண்டுப் பிரசுரம் வழக்குத்தொடுப்புத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது எவ்வாறு என விளக்குகின்றது

இத்துண்டுப் பிரசுரம் வழக்குத்தொடுப்புத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது எவ்வாறு என விளக்குகின்றது.

அரச வழக்குத்தொடுப்பு சேவையே (Crown Prosecution Service - CPS) இங்கிலாந்துக்கும் வேல்ஸுக்கும் பொதுவான பிரதான அரசதரப்பு வழக்குத்தொடுப்புச் சேவையாக உள்ளது. 2010 ஜனவரியில் அது இறைவரி மற்றும் சுங்க வழக்குத்தொடுப்பு அலுவலகத்துடன் இணைக்கப்பட்டது. இறைவரி மற்றும் சுங்க வழக்குத்தொடுப்புக்களுக்கும் பணிப்பாளராக உள்ள அரசதரப்பு வழக்குத்தொடுப்புப் பணிப்பாளர் (Director of Public Prosecutions - DPP) சேவையைத் தலைமை தாங்கி நடத்திவருகின்றார். வழக்குத்தொடுப்புச் சேவை ஆற்றும் பணி குறித்து நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லவேண்டிய சட்ட மா அதிபரின் (Attorney General) கண்காணிப்பில், அரசதரப்பு வழக்குத்தொடுப்புப் பணிப்பாளர் சுயாதீனமாக தனது பணிகளைச் செய்து வருகின்றார்.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பின்புலம் | 3 |
| அரச வழக்குத்தொடருநர்களின் நெறிமுறைக்கோவை | 4 |
| வழக்குத்தொடுக்கவேண்டுமா என்கிற தீர்மானம் | 5 |
| குற்றச்செயலால் வஞ்சிக்கப்பட்டோர் | 8 |
| நுழைவாயில் பரிசோதனை | 8 |
| குற்றச்சாட்டுக்கள் தெரிவு | 9 |
| நீதிமன்றத்துகக் வெளியே காணப்படும் தீர்வுகள் | 9 |
| இளையோர் | 10 |
| குற்ற ஏற்பு வழக்குரைகளை ஏற்றல் | 11 |
| வழக்குத்தொடுப்புத் தீர்மானத்தை மீளாய்தல் | 11 |
| வஞ்சிக்கப்பட்டோருக்கான ஆதரவுத் தொடர்புமுனை | 12 |
| முறைப்பாடுகள் | 12 |
| பயனுள்ள தொடர்புகள் | 13 |

## பின்புலம்

அரச வழக்குத்தொடுப்புச் சேவை 1986ம் ஆண்டு அமைக்கப்படுவதற்குமுன், வழக்குகளை நீதிமன்றம் கொண்டுசெல்வதாவென காவல்துறையினரே தீர்மானித்து வந்தனர்.

இன்று அரச வழக்குத்தொடுப்புச் சேவையே ஆட்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தொடுப்பதா அல்லவா எனத் தீர்மானிக்கின்றது. இருப்பினும், சாட்டப்படும் குற்றச்செயலைக் காவல்துறையினரே இன்னமும் புலன்விசாரணை செய்கின்றனர்.

அதிபாரதுாரமான அல்லது அதிசிக்கலான வழக்குகள் விடயத்தில், வழக்குத்தொடுநர்கள் ஆளொருவர் மீது குற்றவியல் குற்றச்சாட்டு (criminal offence) ஒன்று சுமத்தப்படவேண்டுமா என்றும், அவ்வாறாயின், அக்குற்றச்செயல் என்னவாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானிப்பார்கள். குற்றச்சாட்டுக்களைக் காவல்துறையினர் தீரமானிக்கும் வழக்குகள் விடயத்திலும் அவர்கள் இதே கொள்கைளையே பின்பற்றுவார்கள்.

நாங்கள் அரச வழக்குத்தொடுநர்களுக்கான நெறிமுறைக் கோவையைப் பின்பற்றியும், குறித்த வழக்கின் நிகழ்வுகளுக்குப் பொருந்தும் கொள்கைகள் எவையும் இருப்பின், அவற்றைப் பின்பற்றியும் வழக்குத்தொடுப்பதா அல்லவா எனத் தீர்மானிக்கின்றோம்.

## அரச வழக்குத்தொடுநர்களின் நெறிமுறைக்கோவை

வழக்குத்தொடுநர்கள், வழக்குகள் குறித்துத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பின்பற்றவேண்டிய அடிப்படை கொள்கைகளை எடுத்துரைக்கும் பொதுமக்கள் ஆவணமே அரச வழக்குத்தொடுநர்களின் நெறிமுறைக்கோவை ஆகும். இந்நெறிமுறைக்கோவை, மூலாதார தரநியமங்கள் (Core Quality Standards) கையேட்டுடன் கிடைக்கும். இவ்விரண்டு ஆவணங்களும் சேர்ந்து வழக்குத்தொடுநர்கள் செய்யும் பணி என்னவென்று பொதுமக்களுக்கு விவரிக்கின்றன. அவர்கள் எவ்வாறு தீர்மானங்களை மேற்கொள்கின்றனர் என்றும் தனது பணியின் முக்கிய கூறு ஒவ்வொன்றையும் பொறுத்தவரை வழக்குத் தொடுப்புச் சேவை தனது சேவையின் தரம் குறித்துக் கொண்டுள்ள அர்ப்பணிப்பு என்ன என்றும் இவ்விவரணம் எடுத்துரைக்கின்றது. ஆவணங்கள் இரண்டினதும் பிரதிகளை உங்கள் பகுதி அரச வழக்குத்தொடுப்புச் சேவை அலுவலகத்தில் அல்லது சேவையின் கீழ்க்கண்ட இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்: www.cps.gov.uk.

ஒவ்வொரு வழக்கும் தனித்துவமானது. அத்துடன் அது அதன் நிகழ்வுகள் மற்றும் சிறப்பியல்புகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்படவேண்டியது. இருப்பினும் வழக்குத்தொடுநர்கள் ஒவ்வொரு வழக்கையும் அணுகுவதற்கு சில பொதுவான கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். அவர்கள் நியாயபூர்வமாகவும் சுயாதீனமாகவும் உணர்வுகளுக்கப்பாற்பட்டும் நடந்துகொள்ளவேண்டும். அவர்கள் சந்தேக நபரது, வஞ்சிக்கப்பட்டவரது அல்லது சாட்சியினது இனம் அல்லது தேசியம், பால், வலதுக்குறைவு, வயது, மதம் அல்லது நம்பிக்கை, அரசியல் கருத்துக்கள், பாலியல் சார்பு அல்லது பால் பற்றிய அடையாளம் என்பன பற்றிய தமது சொந்தக் கருத்துக்களை தமது தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்த அனுமதிக்கலாகாது.

**பொருத்தமான குற்றச்செயலுக்குப் பொருத்தமான ஆள் மீது வழக்குத்தொடுக்கப்படல் வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பது அவர்களது கடமை. அவ்வாறு செய்யும்போது குற்றத்தீர்ப்பை மட்டும் இலக்காகக் கொள்ளாது, நீதியை நிலைநாட்டும் நோக்குடன் அவர்கள் எப்போதும் செயலாற்ற வேண்டும்.**

## வழக்குத்தொடுக்கவேண்டுமா என்கிற தீர்மானம்

காவல்துறையினரிடமிருந்து வரும் ஒவ்வொரு வழக்கும் வழக்குத்தொடுப்பு சேவையால், அது வழக்குத்தொடுப்புக்கு ஏற்றது என்று உறுதி செய்யும் பொருட்டு, மீளாய்வு செய்யப்படுகின்றது. அதிபாரதூரமான அல்லது அதிசிக்கலான வழக்குகள் விடயத்தில், ஆளொருவர் மீது குற்றவியல் குற்றச்சாட்டு சுமத்தப்படவேண்டுமா என்றும், அவ்வாறெனில், அக்குற்றம் என்னவாக இருக்கவேண்டுமென்றும் தீர்மானிப்பதற்கு வழக்குத்தொடுநர்களே பொறுப்பாக இருக்கின்றனர்.

வழக்கு ஒன்று நீதிமன்றத்தில் தொடுக்கப்படவேண்டுமா எனத் தீர்மானிக்கும் நிலையில், வழக்குத்தொடுநர்கள், பொருத்தமான சூழ்நிலைகளில், வழக்குத்தொடுப்பதை விடுத்து மாற்று நடவடிக்கைகளை எடுக்கலாமா என ஆராய்வார்கள். இவற்றில் வயதுவந்தவர்களெனில், சாதாரண அல்லது நிபந்தனையுடன் கூடிய எச்சரிப்பு இளையோரெனில் கடிந்துரை, எச்சரிக்கை அல்லது நிபந்தனையுடன் கூடிய எச்சரிப்பு என்பனவும் அடங்கும்.

காவல் துறையினரிடமிருந்து கோவை ஒன்றை நாங்கள் பெற்றுக்கொண்டதும், வழக்குத்தொடுநர் ஒருவர் ஆவணங்களை வாசித்து எதிராளிக்கு எதிராகப் போதிய சாட்சியம் உண்டா அல்லவா என்றும் பொதுநலனைக் கருதி வழக்குத்தொடுப்பு அவசியமா என்றும் தீர்மானிப்பார். சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்படக்கூடுமென்பதால் வழக்குத்தொடருநர் வழக்கைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்தவண்ணமிருப்பார். குற்றச்சாட்டுகளை மாற்றவேண்டுமென்றோ, வழக்கை நிறுத்தவேண்டுமென்றோ அவர் நினைப்பாராயின், இயலுமானவிடத்து அவர் காவல் துறையினருடன் தொடர்பு கொள்வார். இது தீர்மானத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மேலதிக தகவல்களை வழங்குவதற்குக் காவல் துறையினருக்கு வாய்ப்பளிக்கிறது.

காவல் துறையினரும் வழக்குத்தொடுப்புச் சேவையும் நெருங்கிப் பணியாற்றினாலும், நாங்கள் ஒருவர் மற்றவரிடமிருந்து முற்றிலும் சுதந்திரமாக உள்ளோம். அத்துடன் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு ஒன்றைத் தொடர்வதா அல்லவா என்று தீர்மானிக்கும் இறுதிப் பொறுப்பு வழக்குத்தொடுப்பு சேவையையே சாரும்.

## வழக்குத்தொடருநர்கள் தீர்மானிக்கும்போது பின்வரும் இரு வினாக்களைத் தம்மிடமே வினாவிக்கொள்ளவேண்டும்

### *எதிராளிக்கு எதிராகப் போதிய சாட்சியம் உண்டா?*

எதிராளிக்கு எதிராகக் 'குற்றத்தீர்ப்பு பெறும் வகையிலான சாத்தியபூர்வமான வாய்ப்பு' ஒன்றைத் தருமளவுக்குப் போதிய சாட்சியம் இருத்தல் அவசியம். குற்றத்தீர்ப்புப் பெறும் வகையிலான சாத்தியபூர்வ வாய்ப்பு என்பது சொந்த உணர்வுகள் நம்பிக்கைகள் என்பனவற்றுக்கு அப்பால் ஆளொருவர் எவ்வளவு தூரம் சுயாதீனமான முடிவை எடுக்கிறார் என்று அளவிட்டுப் பார்க்கும் ஒரு பரிசோதனையாகும். இதன் அர்த்தம் ஜூரர்களோ, நீதவான்கள் கொண்ட நீதிமன்றமோ நீதிபதியோ வழக்கு ஒன்றை விசாரிக்கும்போது, சரியாக நெறிப்படுத்தப்பட்டு, சட்டத்துக்கு அமைய நடந்துகொள்வார்களெனில், அவர்கள் எதிராளியை, குறித்த குற்றச்சாட்டில் சுற்றவாளியாக அல்லாமல் குற்றவாளியாகக் காண்பது கூடுதல் சாத்தியமாக இருக்கும் என்பதாகும். இது குற்றவியல் நீதிமன்றங்கள் பிரயோகிக்கவேண்டிய பரிசோதனையிலிருந்து வேறுபட்டது. நீதவான்களோ ஜூரர்களோ எதிராளி குற்றவாளி என்று உறுதியாகினால் மட்டுமே அவர் மீது குற்றத்தீர்ப்பு விதிக்கவேண்டும்.

வழக்குத்தொடருநர்கள் வழக்குத்தொடுப்புக்குப் போதுமான சாட்சியம் உண்டா என்று தீர்மானிக்கும்போது, அச்சாட்சியத்தை நீதிமன்றத்தில் பயன்படுத்தலாமா என்றும் அது நம்பிக்கையான சாட்சியமா என்றும் ஆராயவேண்டும். தீர்மானத்துக்கு வருமுன், அவர்கள் அனைத்துச் சாட்சிகளதும் தரத்தை மதிப்பிடவேண்டுமென்பது இதன் அர்த்தமாகும். சாட்சி ஒருவரின் சாட்சியத்தின் நம்பிக்கைத்தன்மையை மதிப்பிடுதல் அல்லது சிக்கல் மிகுந்த சாட்சியத்தை மேலும் விளங்கிக்கொள்ள முனைதல் உதவியாக இருக்குமென்று கருதப்படின், சாட்சியுடன் பொருத்தமான பயிற்சியும், அதிகாரமும் பெற்ற வழக்குத்தொடுநர் ஒருவர், விசாரணைக்கு முன் நேர்முகமாக உரையாடவேண்டும். வழக்குத்தொடருநர் வழக்கைக் கைவிடுவது, அவர் ஒரு சாட்சியை நம்பவும், மற்றெரு சாட்சியை நம்பாதிருக்கவும் தீர்மானித்துள்ளார் என்று அர்த்தமாகாது.

குற்றத்தீர்ப்பு பெறும் சாத்தியபூர்வமான வாய்ப்பு இல்லையெனில், வழக்கை, அது எவ்வளவு பாரதூரமானதாகவோ, கூருணர்வுள்ளதாகவோ இருப்பினும், தொடர இயலாது.

குற்றத்தீர்ப்புப் பெறுவதற்கு சாத்தியபூர்வமான வாய்ப்பு ஒன்று இருப்பின், வழக்குத்தொடுநர் அடுத்த வினாவை வினாவுவார்.

*பொதுநலன் கருதி வழக்குத் தொடுக்கப்படவேண்டுமா?*

குற்றவியல் குற்றம் ஒவ்வொன்றும் தன்னியக்கமாக வழக்குத்தொடுப்புக்கு உட்படுத்தப்படவேண்டுமென்ற விதி என்றும் இந்நாட்டில் இருந்தது கிடையாது. ஆகவே ஒவ்வொரு வழக்கிலும் வழக்குத்தொடுப்பு அவசியமா என்பதை வழக்குத்தொடருநர் ஆராய்வது அவசியம்.

வழக்குத்தொடுப்புக்கு எதிரான பொதுநலக் காரணிகள், அதற்குச் சாதகமான காரணிகளைவிடக் கூடுதலாக இருந்தாலொழிய, அல்லது முதலில் நீதிமன்றத்துக்கு வெளியே விடயத்தைத் தீர்த்துக்கொள்ள தவறாளிக்கு வாய்ப்பளித்தல் பொதுநலனுக்கு உகந்ததாக அமையுமென வழக்குத்தொடுநருக்கு நிச்சயமாகத் தெரிந்தாலொழிய, வழக்குத்தொடுப்பு மேற்கொள்ளப்படுதல் வழமையான நடைமுறையாக இருக்கும்.

வழக்குத்தொடுக்கும் தீர்மானத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பொதுநலக் காரணிகள் வழக்குக்கு வழக்கு வேறுபடும். எவ்வளவுக்கு குற்றம் அதிபாரதூரமானதாக இருக்கிறதோ, அல்லது எவ்வளவுக்குத் தவறாளியின் குற்றவியல் நடத்தை அதிபாரதூரமானதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு பொதுநலனைக் கருத்தில் கொண்டு வழக்கைத் தொடுக்கவேண்டிய தேவைப்பாடு சாத்தியமானதாக இருக்கும். அதே சமயம், நீதிமன்றம் பெயரளவுக்குத் தெண்டம் விதிக்கும் சாத்தியம் தென்படுமானால், அல்லது குற்றச்செயலுடன் தொடர்புடைய இழப்பு அல்லது தீங்கு அற்பமானதாகவும் ஒரே சம்பவத்தின் விளைவாகவும் காணப்படுமாயின், வழக்குத்தொடுப்புக்கான தேவைப்பாட்டின் சாத்தியம் குறையும்.

## குற்றச்செயலால் வஞ்சிக்கப்பட்டோர்

பொது நலன் கருதி வழக்குத்தொடுப்பு அவசியமா எனத் தீர்மானிக்கும் விடயத்தில் வழக்குத்தொடுநர்கள் வஞ்சிக்கப்பட்டவர் குற்றத்தின் தாக்கம் குறித்து தெரிவிக்கக்கூடிய கருத்துக்களை கருத்தில் கொள்ளவேண்டும். சில வழக்குகளைப் பொறுத்தவரை வஞ்சிக்கப்பட்டவரின் குடும்பத்தினரது கருத்துக்கள் வழக்குத்தொடுநரால் கருத்தில் எடுக்கப்படவேண்டியிருக்கும். ஆனால், சொலிசிட்டர்கள் தங்கள் கட்சிக்காரருக்காகச் செயற்படுவது போல வழக்குத்தொடுப்புச் சேவை வஞ்சிக்கப்பட்டவருக்காகவோ அவரது குடும்பத்தினருக்காகவோ செயற்படுவதில்லை. அது மட்டுமல்ல, வழக்குத்தொடுநர்கள் பொதுநலனை முன்னிறுத்தி, முழுமையான கருத்து ஒன்றைப் பெற்றுக்கொள்ள முனைவது அவசியமாகும்.

## நுழைவாயில் பரிசோதனை

சில வழக்குகளில் ஆளொருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டதன் மேல் அவரைப் பிணையில் விடுதல் பொருத்தமான செயலாக இருக்கமாட்டாது. அதேசமயம் ‘குற்றத்தீர்ப்பு ஒன்றைப் பெறும் வகையில் சாத்தியபூர்வமான வாய்ப்பை’ ஏற்படுத்தும் சாட்சியம் இன்னமும் கிடைத்திருக்காது. உதாரணமாக, குற்றச்சாட்டு சுமத்தப்படுமுன் இருந்த வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள் மருத்துவ மற்றும் நிபணத்துவ சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ள இயலாது போயிருக்கலாம். இவ்வாறான வழக்குகளைக் கையாளும்போது வழக்குத்தொடுநர்கள் நுழைவாயில் பரிசோதனையை நடத்துவார்கள். இப்பரிசோதனையை நடத்துவதற்கு: நியாயமான கால எல்லைக்குள் மேலதிக சாட்சியங்கள் கிடைத்துவிடும் என நம்புவதற்கு நியாயமான காரணிகள் இருத்தல் வேண்டும்; வழக்கின் பாரதூரத்தன்மை அல்லது சூழ்நிலை உடனடிக் குற்றச்சாட்டுத் தீர்மானத்தை நியாயப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்; பிணை விடுத்தலை ஆட்சேபிப்பதற்கு காரணிகள் இருத்தல் வேண்டும்.

## குற்றச்சாட்டுக்கள் தெரிவு

வழக்குத்தொடுநர்கள் வழக்கு ஒன்றை மீளாய்வு செய்யும்போது, எதிராளிக்கு எதிராகச் சரியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளனவா என்று எப்போதும் பரிசீலனை செய்தல் வேண்டும். குற்றத்தின் பாரதுாரத்தன்மை மற்றும் விரிவளவை குற்றச்சாட்டுகள் பிரதிபலித்து நீதிமன்றத்துக்கு போதிய அளவு தீர்ப்பளிக்கும் அதிகாரங்களை வழங்கவேண்டும். நீதிமன்றத்துக்குத் தெளிவாகவும் எளிமையாகவும் வழக்கை விளக்கும் வகையில் குற்றச்சாட்டுக்களின் தெரிவும் எண்ணிக்கையும் இருப்பதும் முக்கியமாகும்.

குற்றச்செயலின் சூழ்நிலையுடன் கூடுதலாக ஒத்துப்போகும் குற்றச்சாட்டு ஒன்று கிடைக்கப்பெறுமானால், வழக்குத்தொடுநர் எதிராளிக்கு எதிரான குற்றச்சாட்டை காலத்துக்குக் காலம் மாற்றலாம் என்பது இதன் அர்த்தமாகும்.

## நீதிமன்றத்துக்கு வெளியே காணப்படும் தீர்வுகள்

குற்றச்செயலின் பாரதுாரத்தன்மை மற்றும் விளைவுகளுக்கு நிபந்தனையுடன் கூடிய எச்சரிப்பு விகிதாசாரப்படி ஏற்புடையதாகக் காணப்படில், வழக்குத்தொடருநர்கள் அதனை வழங்க முன்வரலாம். நிபந்தனையுடன் கூடிய எச்சரிப்பு குற்றவியல் தீர்ப்பாகாது. ஆனால் அது தவறாளியின் குற்றவியல் பதிவேட்டின் ஒரு பகுதியாக அமையும். அத்துடன் பின்னர் எழக்கூடிய நீதிமன்ற விசாரணைகளின்போது இப்பதிவு சுட்டிக்காட்டப்படலாம். தவறாளி மீளக் குற்றம் புரிவாராயின் அப்போது வழக்குத்தொடுநர்கள் அப்பதிவைக் கருத்தில் எடுக்கக்கூடும்.

முடிக்குரிய நீதிமன்றத்தில் (crown court) மட்டும் விசாரிக்கப்படக்கூடிய குற்றச்செயலுக்காக தவறாளி ஒருவருக்கு சாதாரண எச்சரிப்பு ஒன்றை வழங்க அதிகாரமளிக்கலாமாவென வழக்குத்தொடருநர்கள் மட்டுமே தீர்மானிக்கலாம். இது பொருத்தமான தீர்வாக அமையும் சந்தர்ப்பங்களை ஒரு விதிவிலக்காகவே கொள்ளலாம்.
ஏனைய வழக்குகள் அனைத்திலும் வழக்குத்தொடுநர்கள் சாதாரண எச்சரிக்கை வழங்குதலை நெறிப்படுத்தலாம் அல்லது குழப்பம்

விளைவித்தமைக்காக தெண்டம் செலுத்தும் அறிவித்தல் வழங்க யோசனை வழங்கலாம்.

எவ்வாறெனினும், குழப்பம் விளைவித்தமைக்காகத் தெண்டம் செலுத்தும் அறிவித்தல் வழங்குதல் பற்றித் தீர்மானிப்பது காவல் துறையினரே.

ஏற்று அனுசரிக்கப்படும் நிபந்தனையுடன் கூடிய எச்சரிப்பு, சாதாரண எச்சரிப்பு அல்லது நீதிமன்றத்துக்கு வெளியே காணப்படும் வேறு தீர்வு என்பவை, வழக்குத்தொடுப்புக்குப் பதிலாக இடம்பெறுவதாகும். நீதிமன்றத்துக்கு வெளியே முன்வைக்கப்படும் தீர்வு நிராகரிக்கப்படின், மூலக்குற்றச்செயலுக்காக வழக்குத்தொடுக்கப்படவேண்டும். நீதிமன்றத்துக்கு வெளியே காணப்படும் வேறு எந்தத் தீர்வினதும் விதிமுறைகள் அனுசரிக்கப்படாவிடில், வழக்குத்தொடருநர்கள் பொதுநலனை முன்னிட்டு, தவறாளி மீது குற்றம் சுமத்தப்படவேண்டுமாவெனத் தீர்மானிப்பார்கள். மூலக்குற்றச்செயலுக்காக வழக்குத்தொடுக்கவேண்டியதே வழமை.

## இளையோர்

குற்றவியல் சட்டத்தின் நோக்கங்களுக்கமைய, இளையவர் என்பவர் 18 வயதுக்குட்பட்ட ஆளொருவர் ஆவார்.

இளையோர் நீதி முறைமையின் முக்கிய நோக்கம், சிறுபிள்ளைகளையும் இளையோரையும் குற்றச்செயலில் ஈடுபடாது தடுப்பதாகும். வழக்குத்தொடுநர்கள் இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும். இளையவர் ஒருவருக்கு எதிராக வழக்குத்தொடுத்தல் பொது நலனுக்கு உகந்ததாவெனத் தீர்மானிக்கும்போது, வழக்குத்தொடுநர்கள் அவரின் நலனையும் கருத்தில் எடுத்தல் வேண்டும். ஆயினும் வெறுமனே சந்தேக நபரின் வயதை முன்னிட்டு, வழக்குத்தொடுநர்கள் வழக்குத்தொடுக்கும் தீர்மானத்தை தவிர்க்கலாகாது. குற்றச்செயலின் பாரதுாரத்தன்மை அல்லது இளையவரின கடந்தகால வாழ்க்கை மிக முக்கியம்.

கடிந்துரைக்கும் இறுதி எச்சரிக்கைக்கும் பொருத்தமற்றதாக குற்றச்செயல் பாரதுாரமாக இருந்தாலொழிய, அல்லது குற்றத்தை ஒப்புக்கொள்ள சிறு பிள்ளையோ இளையவரோ மறுத்தாலொழிய, இளையோர் சம்பந்தப்பட்ட வழக்குகள், வழமையாக ஏற்கனவே

அவர்கள் மேற்கண்ட நடவடிக்கைளில் ஒன்றுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால் மட்டும் வழக்குத்தொடுப்புக்காக வழக்குத்தொடுப்புச் சேவைக்குப் பாரப்படுத்தப்படும்.

கடிந்துரைகளும் இறுதி எச்சரிக்கைகளும் நிபந்தனையுடன் கூடிய எச்சரிப்புக்களும் மீளவும் குற்றச்செயலில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் வழங்கப்படுகின்றன. இந்நிலையில் மேலுமொரு குற்றச்செயல் நிகழ்வு, முன்னைய தீர்வுகள் பலன்தரவில்லை என்பதைச் சுட்டி நிற்கின்றது. இத்தகைய வழக்குகளில் பொதுநலனை முன்னிட்டு வழக்குத்தொடுப்புத் தேவை.

## குற்ற ஏற்பு வழக்குரைகளை ஏற்றல்

எதிராளி ஒருவர் சில சமயங்களில் குற்றச்சாட்டுக்கள் அனைத்துக்கும் அல்லாது சிலவற்றுக்கு மட்டும் குற்றவாளியென ஏற்றுக்கொள்ள விரும்புவார். அல்லது வேறு, பாரதூரத்தன்மை குறைந்த குற்றச்சாட்டை ஏற்க விரும்புவார். குற்றச்செயலின் பாரதூரத்தன்மைக்கு ஏற்ப நீதிமன்றம் தண்டனை வழங்குமென நினைத்தால் மட்டுமே வழக்குத்தொடுநர்கள் இதற்கு இணங்கவேண்டும். வழக்குத்தொடருநர்கள் செய்யமுடியாத ஒன்று ஏதெனில், நீதிபதியை அல்லது நீதவான்களை ஒரு குறிப்பிட்ட வகைத் தண்டனையை வழங்குமாறு கேட்பதே.

முன்வைக்கப்பட்ட வழக்குரைகள் ஏற்புடையவையா எனத் தீர்மானிக்கும் விடயத்திலும், வழக்குரையை ஏற்பது பொது நலனுக்கு உகந்ததா எனத்தீர்மானிக்கும் விடயத்திலும் வழக்குத்தொடுநர்கள் வஞ்சிக்கப்பட்டவரது நலன்கள் அல்லது, பொருத்தமான வழக்குகளில், அவரது குடும்பத்தினரது கருத்துக்கள் கருத்தில் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். எனினும் தீர்மானம் எடுத்தல் வழக்குத்தொடருநரைச் சார்ந்தது.

## வழக்குத்தொடுப்புத் தீர்மானம் ஒன்றை மீளாய்வு செய்தல்

வழமையாக, வழக்குத்தொடுப்புச் சேவை சந்தேக நபர் அல்லது எதிராளி ஒருவரிடம், அவர் மீது வழக்குத் தொடுக்கப்படமாட்டாது என்றோ வழக்குத்தொடுப்பு நிறுத்தப்பட்டுவிட்டது என்றோ கூறுமாயின், வழக்கு மீள நடைபெறமாட்டாது. ஆயினும் வழக்குத்தொடுப்பை தொடராதுவிடும் தீர்மானத்தை வழக்குத்தொடுப்பு சேவை எதற்காக மாற்றலாம் என்பதற்கு விசேட காரணங்கள் சில சமயங்களில் எழும். முதல் தீர்மானத்தை புதிதாக நோக்கும்போது அத்தீர்மானம் தவறு என்று தோன்றி,

குற்றவியல் நீதி முறைமையில் நம்பிக்கையை நிலைநாட்ட வழக்குத்தொடுப்பு அவசியமெனக் கருதப்படுதல்; அல்லது மேலதிக சாட்சியம் பின்னர் கிடைத்தல் என்பன காரணங்களில் அடங்கலாம்.

## வஞ்சிக்கப்பட்டோருக்கான ஆதரவுத் தொடர்புமுனை

மேலும் உதவி அல்லது ஆதரவு தேவையாயின் நீங்கள் வஞ்சிக்கப்படடோருக்கான ஆதரவுத் தொடர்புமுனையுடன் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்:

**0845 30 30 900**

இத் தொடர்புமுனையை வஞ்சிக்கப்பட்டோருக்கான ஆதரவு எனப்படும் சுயாதீன நம்பிக்கைப்பொறுப்பு அமைப்பு நடத்திவருகின்றது. அமைப்பின் பயிற்சிபெற்ற பணியாளர்களும் ஆர்வலர்களும் குற்றச்செயல்களின் தாக்கத்தை அனுபவித்தோருக்கு உணர்வுபூர்வ ஆதரவும், தகவல்களும், செயல்முறை உதவியும் வழங்கி வருகின்றார்கள்.

வஞ்சிக்கப்பட்டோருக்கான ஆதரவு ஓர் உள்நாட்டு தொலைபேசி இணைப்பிலக்கமாகும். அத்துடன் குற்றச்செயலால் தாக்கம் அடைந்தவர், எவருக்கும், குற்றம் அறிவிக்கப்பட்டிருப்பினும் அல்லாவிடினும், அவசியமானதொரு தொடர்புமுனையாக உள்ளது.

பணியாளர்கள் வஞ்சிக்கப்பட்டோருக்கான ஆதரவு மூலம் கிடைக்கும் இலவச மற்றும் அந்தரங்க சேவைகளை உங்களுக்கு விளக்கி, அவசியமானால், உங்களை அவர்களது உள்ளக வஞ்சிக்கப்பட்டோருக்கான ஆதரவுத் திட்டத்துடன் அல்லது சாட்சியச் சேவை அல்லது வேறு ஓர் அமைப்புடன் தொடர்புபடுத்திவிடலாம்.

## முறைப்பாடுகள்

நாங்கள் முறைப்பாடுகளைக், கூருணர்வுடனும், நியாயபூர்வமாகவும் அந்தரங்கமாகவும் கையாள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். எங்கள் முறைப்பாட்டு நடைமுறையின் விபரங்களை அரச வழக்குத்தொடுப்பு சேவையின் இணையத்தளத்தில் (CPS website) காணலாம்: www.cps.gov.uk

## பயனுள்ள தொடர்புகள்

குற்றவியல் நீதி முறைமை பல முகவராண்மைகளைக் கொண்டதாக உள்ளது. நீங்கள் மேலும் தகவலறிய ஆவலாக இருப்பின், கீழ்க்கண்ட முகவராண்மைகள் உங்களுக்கு உதவக்கூடும்.

உள்துறை அமைச்சு
www.homeoffice.gov.uk
தொலைபேசி: 020 7035 4848
மின்னஞ்சல்: public.enquiries@homeoffice.gsi.gov.uk

நீதி அமைச்சு
www.justice.gov.uk
தொலைபேசி: 020 3334 3555
மின்னஞ்சல்: general.queries@justice.gsi.gov.uk

நீதிமன்ற சேவை
www.hmcourts-service.gov.uk
தொலைபேசி: 0845 4568770

குற்றவியல் நீதிச் சேவை
www.cjsonline.gov.uk
OCJRenquiry@cjs.gsi.gov.uk

முதன்மைக் காவல் துறை அலுவலர்கள் சங்கம்
www.acpo.police.uk
தொலைபேசி: 020 7084 8950
மின்னஞ்சல்: info@acpo.pnn.police.uk

வஞ்சிக்கப்பட்டோருக்கான ஆதரவு
www.victimsupport.org.uk
தொலைபேசி: 0845 30 30 900

தவறாளிகள் பராமரிப்பு மற்றும் மீள்குடியேற்றத்துக்கான தேசிய சங்கம்
www.nacro.org.uk
தொலைபேசி: 020 7840 7200

இளையோர் நீதிச் சபை
www.yjb.gov.uk
தொலைபேசி: 020 3372 8000
மின்னஞ்சல்: enquiries@yjb.gov.uk

## அரச வழக்குத்தொடுப்பு சேவை பற்றிய விசாரணகள்

அரச வழக்குத்தொடுப்புச் சேவை பற்றிய பொதுவான தகவல்களுக்கும், எவருடன் தொடர்பு கொள்ளவேண்டுமென்ற ஆலோசனைக்கும், தயவு செய்து அரச வழக்குத்தொடுப்புச் சேவை விசாரணைகளுடன் (CPS Enquiries) தொடர்பு கொள்ளவும்.
மின்னஞ்சல்: enquiries@cps.gsi.gov.uk

இப்பிரிவினால் சட்ட ஆலோசனை வழங்க இயலாது. ஆயினும் நடைமுறைச் சாத்தியமான தகவல்களை உங்களுக்கு வழங்க இயலக்கூடும். நீங்கள் எங்கள் இணையத்தளத்தினூடாக முறைப்படியான பின்னூட்டலை அல்லது முறைப்பாடுகள் எவற்றினதும் விபரங்களை சமர்ப்பிக்கலாம்.

இது ஒரு பொதுமக்கள் ஆவணமாகும்.

இவ்வாவணத்தின் மேலதிக பிரதிகளும் மாற்று மொழிகள் மற்றும் நூல்வடிவங்கள் பற்றிய தகவல்களும் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கும்:

CPS Communication Division
Rose Court
Southwark Bridge
London SE1 9HS

மின்னஞ்சல்: publicity.branch@cps.gsi.gov.uk

அரச வழக்குத்தொடுப்பு சேவை பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும், இவ்வாவணத்தின் மின்னியல் பிரதியைப் பார்க்கவும் அல்லது பதிவிறக்கம் செய்யவும் தயவு செய்து எங்கள் இணையத்தளத்துக்குச் செல்லவும்:
www.cps.gov.uk
அரச வழக்குத்தொடுப்புப் பணிப்பகம்

© அரச பதிப்புரிமை 2010